சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில், துறைமுகம் கிழக்கு பகுதியில், மனிதநேய உதயநாளை முன்னிட்டு "உதயம் – 14, கொடுக்க பிறந்த கரம்! உதயம் திராவிட வரம்!! எனும் தலைப்பில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், பகுதி இளைஞரணி அமைப்பாளர் பி. செந்தில்குமார் தலைமையில் நடைபெற்ற மாபெரும் நலத்திட்டம் வழங்கும் விழாவில் ஆ.ராசா எம்.பி, அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, வைகை புயல் வடிவேலு ஆகியோர் அன்னை தயாளு அம்மாள் தொண்டு நிறுவனத்தில் பயிற்சி பெற்ற 183 மகளிருக்கு தையல் இயந்திரம், 291 மாணவமாணவியருக்கு மடிக்கணினி, 500 கழக மகளிர்களுக்கு சுழல்நிதி மற்றும் பரிசு பொருட்கள் வழங்கி சிறப்புரையாற்றினர். இதில்மேயர் பிரியா ராஜன்,எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, இரா.நரேந்திரன், வானவில்விஜய், ஜி.எம்.தேவன், இசட்.ஆசாத் எம்.சி, ப.ஸ்ரீராமுலு எம்.சி., உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஜி.ஜெ.பிரபு தலைமை!

துணை முதல்வர் பிறந்தநாள்: வில்லிவாக்கம் மேற்கு பகுதியில் பாட்டரங்கம்!

அமைச்சர் அர.சக்கரபாணி - திருவாரூர் அபு - கல்பாக்கம் காயத்ரி - திருச்சி அன்னலட்சுமி - புதுவை மதன் சிறப்புரை!

சென்னை,நவ.30-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில், வில்லிவாக்கம் மேற்கு பகுதியில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு "உதயம் 18", உதயம் எழுகிறது! திராவிடம் ஒளிர்கிறது! எனும் தலைப்பில், மாபெரும் பாட்டரங்கம் 01-12- 25 திங்கட்கிழமை மாலை 6.00 மணியளவில், சென்னை, வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் பாட்டரங்கத்தில், சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜி.ஜெ.பிரபு தலைமை வகிக்கிறார். கழகப் பொருளாளர் கழக நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி, சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், தயாநிதிமாறன் எம்.சி, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ. ஜெயின் எம்.சி, வே.வாசு எம்.சி, வானவில் விஜய், சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, டி.வி. செம்மொழி எம்.சி, லதா வாசு எம்.சி, ஆர்.வரதன், எம்.சுரேஷ் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர் நானா, சிட்கோ சேகர், க.சுகுமாறன், மா.கிலன், பா.ஜானி, செ.முருகேசன், ப.லோகு பாபு, கே.எஸ்.பாபு, வெ. மகேந்திரன், ம.ஜெகதீஸ்வரன், ப.மணிகண்டன், டி.கே.நல்லரசு, சு.கமலக்கண்ணன், க.சிலம்பரசன், எஸ். மோகன்ராஜ், தே.ஆகாஷ்(எ) ஹரிஹரசுதன், சி.எம்.பாரதி, டோ.பால ஸ்டீபன், ம.முனுசாமி, சே.ராஜா, ஆர்.சீனிவாசன், ப.கார்த்திக், எம்.சிவராஜ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் பாட்டரங்கத்தை - மாண்புமிகு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்து சிறப்பித்தல், நடுவராக கல்பாக்கம் ரேவதி மற்றும் குழுவினரும், மொழி உணர்வே? எனும் தலைப்பில் கல்யாணமாலை புகழ் திருவாரூர் அபு, கலக்கப் போவது யாரு புகழ் கல்பாக்கம் காயத்ரி அவர்களும், சமூக உணர்வே? எனும் தலைப்பில் கலக்கப்போவது யாரு புகழ் திருச்சி அன்னலட்சுமி, இன்னிசை இளவல் புதுவை மதன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

மேலும் பாட்டரங்கத்தில், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன் , ஓ.ஏ.நாகலிங்கம், மாநில நிர்வாகிகள்: கே.எஸ்.இரவிச்சந்திரன் பி.கே.மூர்த்தி, கே.சந்துரு சி.மகேஷ்குமார் சங்கரி நாராயணன் , எஸ்.மணிமுடி கே.எஸ்.எம்.நாதன் எம்.விஜயகுமார் என்.பி.எம்.ஷேக் அப்துல்லா வே.உமாகாந்த் பரிதிஇளம்சுருதி வழக்கறிஞர்இந்திரஜித் காஞ்சிபாஸ்கர் மாவட்ட நிர்வாகிகள் கோ. ஏகப்பன் தேவஜவகர் ஜி.மகாதேவன் புனிதவதிஎத்திராசன் இசட்,ஆசாத் , மண்டல குழு தலைவர்கள் சொ.வேலு சரிதாமகேஷ்குமார் MC பா.ஸ்ரீராமுலு டாக்டர்.ஜி.சாந்தகுமாரி MC.

பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ.முரளிதரன் எ.நாகராசன் MC டி.எஸ்.பி.இராஜகோபால் MC எம்.டி.ஆர்.நாகராஜ் செ.தமிழ் வேந்தன் எம்.சாமிக்கண்ணு V.சுதாகர் எஸ்.முரளி எஸ். இராஜசேகர் பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பன்னீர் செல்வம் கோ.மணி பி. ஜெ.துளசிங்கம் லயன்பி.உதயசங்கர் வி.இரமேஷ்(எ)நீல கண்டன் Mc எம்.இப்ராஹிம் கனி அ.நிர்மலாதேவி ஏ.பி. பூர்ணிமா MC இரா.கலைச்செல்வி. மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நா. ரஞ்சித் விஜயாலயன் நா.துலுக்காணம் எல்.பி.எப். மோகன் துரைகண்ணன் ஜி.தாமோதரன் ராஜேஸ்வரி ஸ்ரீதர் ஜி.வி.நாகவள்ளி MC எம்.பெரோஸ்கான் பி.விஜயகுமார் எம்.விநாயகம் ஆர். எஸ்.சித்திக் ம.அசோக்குமார் க.பா.பிரதீப்குமார் கு.கிருஷ்ணமூர்த்தி எல்.சம்பத்குமார் கா.ராஜ்முகமது து.ஆயிரம் இரா.வீரமணி. வில்லிவாக்கம் மேற்கு கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: ஜெ.எஸ்.பிரபு வி.து.இராமமூர்த்தி பா. இளையா ம.கலைச்செல்வி ஐ.சி.எப்.மு.சுரேஷ்பாபு புரசை டி.சம்பத் டி.தாமோதரன் W.அமுல் நா.அறிவுடைநம்பி. வி.கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் எ. வேதா விக்னேஷ்சீனிவாசன் ச.மனோகரன் கே.பாஸ்கர் சி.தேவராஜ் காஞ்சி.செ.துரை, வில்லிவாக்கம் மேற்கு கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.கோபாலகிருஷ்ணன் சிட்கோ.ப.சுரேஷ்பாபு ம.சுந்தர்எபி கோ.மணி வேந்தன் மா.கபிலன் பா.தே.தீன தயாளன் கே.எஸ்.பாபு க. மணிமாறன் எஸ்.கே.பி.தீபக் குமார் ஆ.சக்திவேல் பூ.சத்தியேந்திரன் வி.சபாபதி வ. ரமேஷ்பாபு மு.பரமானந்தம் டி.ஸ்டாலின் ந.குமார் எ.சத்தியநாராயணன் கி.ஜெய்சங்கர் ப.செந்தி ல்குமார் எஸ். துரைபாபு கே.ராஜா வி.ஆர். ஜெயக்குமார். பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் இரவையிரபு சே.பாலாஜி என்.பி.எம்.வசந்த் க.பிரசாத் ந.திலிப்குமார் லயன்.J.P.R.ரகு ஜெ.மணிகண்டன் பி. ஸ்ரீதர் ராஜன் த.ஜெய குமார் பு. செந்தில்குமார் நா. மோகன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

இந்நலத்திட்ட விழாவில் வட்ட கழக செயலாளர் ஆர். தீனதயாளன் நன்றி கூறுகிறார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் டிட்வா புயலையொட்டி கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் தரங்கம்பாடியில் முகாமிட்டுள்ளதை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பார்வையிட்டு ஆய்வு செய்யதார் . உடன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் கவிதா ராமு,, மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. , எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியர்.எஸ். ஸ்ரீகாந்த், தகவல் தொழில் நூட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம். ஸ்ரீதர், மு. ஞானவேலன்,,நகர செயலாளர்கள் என். செல்வராஜ், ம.சுப்பராயன், ஒன்றிய ச் செயலாளர்கள் அமிர்த.விஜயகுமார், என.இளையபெருமாள், மங்கை சங்கர்,ஏ.ஜி.ஜே. பிரபாகர் ப. முருகமணி, ஏ. ஆர்.ராஜா, பஞ்சு.குமார், பொதுக் குழு உறுப்பினர் ஹர்ஷத் தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணாசங்கரி, துணை தலைவர் பொன் ராஜேந்திரன், மற்றும் பலர் உள்ளனர்

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில்- மயிலாடுதுறையில் டிட்வா

புயலையொட்டி கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆய்வுக் கூட்டம்!

நிவேதா எம். முருகன், எம்.எல்.ஏ., - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை நவ. 30

மயிலாடுதுற மாவட்டம் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் "டிட்வா" புயலையொட்டி கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தலைமையில் நடைபெற்றது.

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் "டிட்வா" புயலையொட்டி கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அ தலைமையில், கோ.ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் கவிதா ராமு, மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம் முருகன், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர், எம பன்னீர் செல்லம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் எஸ். ஸ்ரீகாந்த், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

ஆய்வு கூட்டத்திற்கு பின், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், மயிலாடுதுறை மாவட்டத்தில் "டிப்வா" புயலை எதிர்கொள்வது தொடர்பாக ஆய்வுக்கூட்டம் நடைபெறுகிறது. மயிலாடுதுறை மாவட்டத்தில், டிப்;வா புயலின் காரணமாக கடந்த இரண்டு நாட்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக 29.11.2025 காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை சராசரியாக 5.1 செ.மீ மழை பதிவாகியுள்ளது. மயிலாடுதுறை மாவட்டத்தில் வடகிழக்குப் பருமழை தொடங்கியது முதல் அக்டோபர், நவம்பர் மாதங்களில் நேற்று(28.11.2025) வரை 160 குடிசைகளும், 22 ஓட்டு வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. மேலும் 117 கால்நடைகள் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. ஒருவருக்க காயங்கள் என்ற அளவிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் புயல் மற்றும் மழை காரணமாக ஏற்படக் கூடிய பாதிப்புகளை உடனடியாக அகற்றி இயல்பு நிலை ஏற்படுத்திட ஏதுவாக அனைத்து துறைகளிலும் ஜெசிபி 133, ஜெனரேட்டர்கள் 164, பவர் சா 57, ஹிட்டாச்சி 31, ஆயில் என்ஜின்கள்22, மணல் மூட்டைகள் 40351, மரம் அறுக்கும் கருவிகள் 84, சவுக்கு கம்பங்கள் 34110 பிளிச்சிங் பவுடர் 5870 கிலோ ஆகியன போதிய அளவில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் மழை, சேதம் தொடர்பான புகார்களை தெரிவிக்கும் வகையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், செயற்கைக் கோளுடன் இணைக்கப்பட்ட அவசர கால கட்டுப்பாட்டு அறைஎண் 1077 மற்றும் 04364222588 அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. மின்சார வாரியம் சார்பில் 10795 மின்கம்பங்கள் இருப்பு உள்ளது. மின்மாற்றிகள் 40 அவசர காலத்திற்கு பயன்படுத்திட இருப்பு உள்ளது. மேலும், கடற்கரையோர கிராமங்களை கண்காணிக்கும் வகையில், 31 வீரர்கள் அடங்கிய மாநில பேரிடர் மீட்பு குழுவினர் சீர்காழியிலும், 31 வீரர்கள் அடங்கிய தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் தரங்கம்பாடியிலும் முகாமிட்டுள்ளனர்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் மிகவும் அதிகமாக பாதிக்கக்கூடிய இடங்களாக 12 இடங்கள், அதிகம் பாதிக்கப்படக்கூடிய இடங்கள்33, குறைந்த அளவு பாதிக்கக்கூடிய 80, மிக குறைந்த பாதிக்கக்கூடிய இடங்கள் 76 ஆக மொத்தம் 201 பாதிக்கப்படக் கூடிய பகுதிகளாக கண்டறியப்பட்டு, அவை தொடர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளன.

இன்றைய தினம், கனமழையோ அல்லது புயலோ ஏற்பட்டால், பாதிக்கப்படக் கூடிய மக்களை பாதுகாப்பாக தங்க வைப்பதற்கு 4 பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையங்கள் உள்ளது 10 புயல் பாதுகாப்பு மையங்கள் மற்றும் தற்காலிக நிவாரண மையங்கள் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் 438, திருமண மண்டபம்146, சமுதாய கூடம்68 ஆகியன தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்திலுள்ள அனைத்து துறை உயர் அலுவலர்கள் பாதிக்கப்பட்ட மக்கள் தங்க வைக்கப்படும் முகாம்களில் தேவையான உணவு, குடிநீர் ஆகியவற்றை முறையாக வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருவாய்த்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் அந்தந்த தலைமையிடங்களில் தங்கி பணிபுரிந்திட அறிவுறுத்தப்பட்டுள்ள னர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, அரசு நிர்வாகம் இந்த புயலை எதிர்கொள்வதற்கு தயார் நிலையில் உள்ளது.

மயிலாடுதுறை மாவட்டத்தில், மிகவும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பாக தங்க வைத்திட தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள தண்ணீரை உடனடியாக அப்புறப்படுத்திடவும், பொதுமக்களின் வீடுகளுக்குள் தண்ணீர் புகாமல் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவும், நீர்வளத்து றை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பி அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் பேட்டி அளித்தார்.

ஆய்வு கூட்டத்திற்கு பின் மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி பகுதியிலுள்ள தனியார் மண்டபத்தில் முகாமிட்டுள்ள தேசிய பேரிடர் மீட்புக்குழுவினரை பார்வையிட்டு, அங்குள்ள பேரிடர் மீட்பு உபகரணங்களை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆய்வு செய்த பின்னர், தரங்கம்பாடி அரசு மருத்துமனையினை பார்வையிட்டு ஆய்வு செய்து, அங்கு தேவையான மருந்துப் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளதா என்று மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களிடம் கேட்டறிந்தார். ஆய்வு கூட்டம் மற்றும் ஆய்வுகளின் போது மயிலாடுதுறை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.ஸ்டாலின், மாவட்ட வருவாய் அலுவலர் தபூங் கொடி தி.மு.க.வை சேர்ந்த மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப் பாண்டியன், தகவல் தொழில் நூட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம். ஸ்ரீதர், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு. ஞானவேலன், நகரக் கழகச் செயலாளர்கள் மயிலாடுதுறை குண்டாமணி (எ) என் செல்வராஜ், சீர்காழி ம.சுப்பராயன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் குத்தாலம் கிழக்கு மங்கை எம்.சங்கர், மயிலாடுதுறை வடக்கு என். இளையபெருமாள். செம்பனார்கோவில் மத்தியம் அமிர்த. விஜயகுமார், மயிலாடுதுறை கிழக்கு ப.முருகமணி, குத்தாலம் மேற்கு ஏ. ஆர்.ராஜா, சீர்காழி கிழக்கு பஞ்சு.குமார், சீர்காழி மேற்கு ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பொதுக் குழு உறுப்பினர் ஹர்ஷத் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் வெடி பாலமுருகன், முருகன்.தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணா சங்கரி குமரவேல், துணை தலைவர் ராஜேந்திரன், மற்றும் அரசு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்ட நெசவாளர் அணி மாவட்ட துணைத் தலைவர்

பி.நடராஜன் இல்லத் திருமண வரவேற்பு விழா: அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்துகிறார்!

மேயர் பிரியா ராஜன் - தயாநிதி மாறன் எம்.பி. பங்கேற்பு! எஸ்.முரளி தலைமை!

சென்னை, நவ. 30

சென்னை கிழக்கு மாவட்ட நெசவாளர் அணி துணைத் தலைவர் பி.நடராஜன் என்.ராஜேஷ்வரி ஆகியோரின் புதல்வி என்.சுபலட்சுமிக்கும், திருப்பத்தூர், ஆர். முகில்வண்ணன் சாந்தி முகில்வண்ணன் ஆகியோரின் புதல்வர் எம்.பவன்குமாரின் திருமண வரவேற்பு விழா இன்று (30.11.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு மேல், வேப்பேரி, ரித்தர்டன் ரோடில் உள்ள பி.கே.என். ஆடிட்டோரியத்தில் நடைபெறுகிறது.

மேற்கு பகுதிச் செயலாளர் எஸ்.முரளி தலைமை வகிக்கிறார்.

எஸ்.ராஜசேகர், இரா. நரேந்திரன், சொ.வேலு, வி. சுதாகர், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், இசட்.ஆசாத், என்.பி.எம்.சேக் அப்துல்லா, ஆர்.கலைச்செல்வி, எம்.இப்ராஹிம் கனி, பா.ஜெகதீஷ், கா.ராஜ் முகமது, கே. கோகுல், பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதீப் குமார், எம்.விநாயகம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மே.ஜனார்த்தனன், கே.ஆர். அபரஞ்சி, எம்.முத்துகுமார், டி.எஸ்.சேகர், நா.ரஞ்சித் விஜயாலயன், ஜெ.ஹரிகுமார், நா.மோகன், பூக்கடை வெங்கடேசன், கே.ஜெய பிரகாஷ், கே.எஸ்.மணி, கே.ஜி. துளசி ராமன், சி.காந்தி, டி.வேலு, கே.பவானி, ஆவின் எஸ்.சந்திரசேகர், பா.முத்துக்குமார், தேவகானம் ராஜா, கேபிள் சங்கர், பிண்ட்டு ஜெயின், ரூபாராம் பட்டேல் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

திருமண வரவேற்பு விழாவில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

திருமண வரவேற்பு விழாவில் மேயர் பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ப.ரங்கநாதன், ப. தாயகம் கவி எம்.எல்.ஏ, அ. வெற்றி அழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பரிதி இளம் சுருதி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, கூ.பீ.ஜெயின் எம்.சி, பி.கே.மூர்த்தி எம்.சி, எஸ்.ராஜேஷ் ஜெயின் எம்.சி, வெ.பரிமளம் எம்.சி, எல். நவின் எம்.சி, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், செ. தமிழ்வேந்தன், வே.வாசு, எம்.சாமிக்கண்ணு, டி.எஸ். பி.இராஜகோபால், எம். டி.ஆர்.நாகராஜ், கோ.ஏகப்பன், தேவஜவகர், புனிதவதி எத்திராசன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.இராமமூர்த்தி, டி. சதீஷ்குமார், சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், எல்.சத்திய நாராயணன், சு.புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், டி.கதிரவன், எம்.பரத்குமார், கே.கவியரசு, அ.நா.பார்த்திபன், நா.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வெ. சந்தானலட்சுமி, சி.ப. ஜெயராமன், சு.பாபு, ஆ. ஆஜித், சரவணன், சா.பாபு, தங்கவேல் ராஜன், ரவிச்சந்திரன், சிவசண்முகம், ரவிச்சந்திரன், ராஜேஷ்குமார், எல். எழிலரசு, ஜி.மாசிலாமணி, லண்டன் முருகன், எம்.வி. ஆர்.சரவணன், எம்.அசோக்குமார், வி.எம்.முருகவேல், ஏ.பி.எஸ்.செந்தில்குமார், வி.சங்கர், எம்.சுரேஷ், எஸ். கதிர்வேலு, ஆர்.தங்கமணி, ஏ.மதுசூதனன், பி.ஜி.சுகுமார், டி.சுபாஷ் சந்திரபோஸ், ஹாஜி முகமது அலி, என். சேகர், கே.சம்பத், பி.சகாயராஜ்,

எம்.ஆனந்தி ரீட்டா, பூக்கடை ராஜா, கே.உமாபதி, சு.அண்ணாதாசன், எம்.சாய் பவன்குமார், தமிழ்வாணன், சுமன்ராஜ், அருண்குமார், எஸ்.ராஜி, டி.சண்முகம், எம். உதயகுமார், எஸ்.முருகன், எம்.அருண்குமார், அ.லிங்கேஸ்வரன், வெ.ராம கிருஷ்ணா, பாலசுப்பிரமணியம், காமேஷ், ந.கிஷோர் மற்றும் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

57 (அ) வட்டக் கழகச் செயலாளர் பா.அண்ணாதுரை நன்றி கூறுகிறார்.

தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரியத்தின் நான்காவது கூட்டம் தேனாம்பேட்டை டி.எம்.எஸ். வளாகத்தில் உள்ள வாரிய அலுவலக கூட்ட அரங்கில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வி.மெய்யநாதன் தலைமையில் வாரியத் துணைத் தலைவர் இராசா அருண்மொழி முன்னிலையில் நடைபெற்றது, கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை செயலாளர் சரவணன்வேல் ராஜ் ஐ.ஏ.எஸ். வாரியத்தின் உறுப்பினர் செயலர் திருமதி கலையரசி ஐ.ஏ.எஸ்., அரசு சாரா உறுப்பினர்கள், அரசு சார்பு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
274	மே.பொ. / கொ.நி / வ.செ.அ.மி.நி - 1	Brushable Ceramic Epoxy material for Condenser Sea water Inlet pipe line in Unit-I

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tntenders.gov.in/nicgep/app, www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/6391/ஒப்பந்தப்புள்ளி/2025

இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு அச்சிறுபாக்கம் மத்திய ஒன்றிய செயலாளர் டி.வி.கோகுல கண்ணன் தலைமையில் பெரும்பேர் முதியோர் இல்லத்தில் உள்ள அனைவருக்கும் அறுசுவை உணவு மற்றும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் காந்தி நகரில் மாணவ மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியம் நிர்வாகிகள் எஸ்.எம்.ஜெயாவுதீன், விடிஆர்வி. எழிலரசன் வசந்தா கோகுலகண்ணன், கருணாகரன், எஸ்.கண்ணதாசன், ஜெ.பார்த்தசாரதி, வி. ரனத்தினவேல், ஜெ.வெங்கடேசன், ஜெ.துரை கணேஷ், எஸ்.சுதாகர் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.